முருகப்பெருமான் துணை

**மகான் சிவயோகமாமுனிவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.06.2023, ஞாயிற்றுக்கிழமை

1. அவதார ஞானியே அரங்கா
அகிலத்தில் அற்புதம் நிகழ்த்த
அவதாரம் உன்வழி ஆறுமுகனார்
ஆற்றல்பட கலியினில் இறங்கி இருக்க
2. இருக்கவே அரங்கமகானுன்
இருகரம்பட ஆசி தீட்சை
கருத்தாக அடைந்த மக்கள்
கலியினில் கடைத்தேறுவரெனக் கூறி
3. கூறியே சோபகிருது மிதுன திங்கள்
குறைவிலா சூலதிகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 03 ம் நாள், 18.06.2023, ஞாயிற்றுக்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசநலமுற சிவயோகமாமுனிவர் யானும்
4. யானுரைக்க தரும ஞானமே
உயிர்கொலை நீக்கி வாழும்
ஞானம் தரும் வல்லமை கொண்ட
நாட்டிடுவேன் அரங்கன் சன்மார்க்கமாகும்
5. ஆகவே சன்மார்க்க நெறி
அனைவரும் ஏற்று வழிபாடு
மகான் வழிகாட்டலின் படி
மகா சோதி சரவணச் சுடர் ஏற்றி
6. ஏற்றியே வேலவன் பூசைபட
இடைவிடா ஞானிகள் பூசை
ஆற்றல்பட செய்து வருகவே
அகிலத்தில் சுப்பிரமண்யர் ஞானம்

7. ஞானம் சக்தியாக இறங்கி
ஞானிகளும் வெளிப்படும்படி
தானாக எங்கும் மாற்றம்
தவராஜன் அவதாரம் வழி நடக்கும்
8. நடக்கவே நல்லத்தலைமைகள்
நாடெங்கிலும் உயர்வானவர்கள்
தடையின்றி முன்னேறிவந்து
தவராஜனின் தேடலின் மூலம்
9. மூலம் ஞானவான்கள் கூடிட
முழுமைபெற்ற சக்தி பெருகி
காலத்தை அஞ்ஞானத்தை மாற்றி
கலியிலும் ஞான ஆட்சி
10. ஞான ஆட்சி அகிலம் எங்கும்
நம்பிக்கை வளர்ச்சித் தரும்படி
வானவர்களும் இயற்கைகாத்து
வரம்தர மாற்றம் நடக்கும்
11. நடக்கும் பாதுகாப்பு மிக்க
ஞானிகளை படைக்க வல்ல
இடரில்லா உலகமாற்றமாக நிகழும்
எங்கும் அமைதி மகிழ்வு கூடும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—